[1979 பிப்ரவரி 17

4 இடங்களில் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 1. தூத்துக்குடி, 2. திருச்சி, 3. கொடைக்கானல், 4. திண்டுக்கல் ஆகிய கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடைய விற்பனை வாயிலாகவும் காய்கறி விற்பனை தற்பொழுதே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கொடைக்கானல் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் வாயிலாக உருளைக் கிழங்கு, ரூ. 4,78,000 மதிப்புள்ள வகையிலே இன்றையதினம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதனைப்போல், திண்டுக்கல் விற்பனை நிலையத்திலே வெங்காயம் ரூ.35,51,000-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. திருச்சி கூட்டுறவு விற்பனை நிலையத்திலே வெங்காயம் ஏறத்தாழ ரூ. 1,00,000-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தூத்துக்குடி கூட்டுறவு விற்பனை நிலையத்தில் வெங்காயம் ஏறத்தாழ ரூ.6,000 அளவுக்கு விற்பனைக்கு அந்த முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, கொடைக்கானல் கூட்டுறவு விற்பனை நிலையத்திலே தற்பொழுது ரூ. 4,78,000 அளவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தண்டையார்பேட்டை பகுதியில் நில ஒப்படை

*வினா எண் 65—திரு. சு. பாலன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை 27-வது வட்டம், தண்டையார்பேட்டையில் காத்பாடா அட்டிங் கிரவுண்ட் ஆர். எஸ். 1802/3, சிதம்பரம் நகரில் சர்க்காருக்குச் சொந்தமான ஆர். எஸ். நெம்பர் 1802 நிலத்தில் எத்தனை அரிசன குடும்பங்கள் வாழ்கின்றனர்?

(ஆ) அவர்கள் எவ்வளவு காலம் அங்கு வாழ்கின்றார்கள்?

(இ) அவர்கள் வாழும் அந்த இடத்திற்கு ஏதாகிலும் வரி அல்லது வாடகை வசூல் செய்யப்படுகிறதா?

(ஈ) இவர்கள் வாழும் இந்த இடத்தைப் பட்டா செய்து செய்து கொடுக்க வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா?

(உ) ஆம் எனில் அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

1979 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை கிராமம், ஆர். எஸ். நெ.1802/3ல் காத்பாடா நகரில் 57 அரிசன குடும்பங்களும் சிதம்பரம் நகரில் 3 அரிசன குடும்பங்களும் வாழ்கின்றனர்.

(ஆ) அவர்கள் 40 வருடங்களுக்கு மேலாக அங்கு வாழ்கிறார்கள்.

(இ) சென்னை மாநகராட்சியினால் சொத்து வரியும், வருவாய்த்துறையினரால் (Full Competitive Rent) குத்தகைத் தொகையும் வசூலிக்கப்படுகிறது.

(ஈ) சிதம்பர நகர், காத்பாடா நகரிலுள்ள ஆக்கிரமிப்பாளர்கள் அந்நிலத்தினை ஒப்படை செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்கள்.

(உ) சிதம்பரம் நகர், காத்பாடா ஆகிய இடங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவதற்காக, குடிசைமாற்று வாரியத்தின் ஒப்புதலையும் சென்னை பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்தின் இசைவையும் பெற கோரப்பட்டுள்ளது.

திரு. சு. பாலன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் வாழ்கின்ற ஒரு சிலருக்கு ஏற்கனவே பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்குப் பட்டா வழங்காத காரணத்தால், அவர்கள் எந்தவிதத்திலும் தங்கள் இல்லத்தைப் பழுது செய்ய முடியவில்லை. அதனால், உடனடியாகப் பட்டா வழங்கவும், அதேபோல் சென்னையிலே உள்ள மற்ற பகுதிகளில் குடிசை மாற்று வாரியத் திட்டத்திற்கு உட்படாத பகுதிகளில், பட்டா வழங்க அரசு முன் வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் .டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இப்படி சென்னையைப் பொறுத்தவரையிலும், மதுரையைப் பொறுத்தவரையிலும் அரசு நிலங்களுக்குப் பட்டா வழங்கக்கூடாது என்று 1971-ம் ஆண்டு இங்கே அரசால் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு அப்படிச் செய்வது சரியல்ல என்று சொல்லி 1973-ம் ஆண்டு இங்கே இருக்கிற குடிசை மாற்று வாரியத்தின் அனுமதி பெற்று வேண்டுமானால் பட்டா கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதற்குக் காரணம், இங்கே இருக்கும் குடிசைகளை மாற்றி அரசே கட்டிடம் கட்டிக்கொடுத்து வருவதால், அரசு நிலங்களை முதலில் குடிசை மாற்று வாரியத்திற்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆகவே குடிசை மாற்று வாரியத்தின் அனுமதி பெற்று எங்கெங்கே பட்டா கொடுக்க வேண்டுமோ அவைகளைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.